RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பாதையில் பதிந்த அடிகள் நாவலில் இடம்பெறும் சமூக சிந்தனைகள்

தா. லிற்றில் மேரி [அ, *]

[அ] தமிழ் உயராய்வுமையம், நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி, களியக்காவிளை-629153, தமிழ்நாடு, இந்தியா

# Social Ideas Embedded in the Novel Paathayil Padintha Adigal

**T. Little Mary** [a, *]

[a] Department of Tamil & Research Centre, Nanjil Catholic College of Arts & Science, Kaliakkavilai-629153, Tamil Nadu, India

* Corresponding Author: littlemaryt76@gmail.com

Received: 21-11-2025
Revised: 27-02-2026
Accepted: 05-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Maniyammal, featured in Rajamkrishnan's novel Paathaiyil Pathintha Adigal is a woman who was married at an early age and became a widow at the age of 20. She used to worship the idols every day in the time when the restrictions were imposed on the Vaidikasamaya, were women were restricted to wear sandals on their feet and even restricted to cover their upper body. This widow woman rages against social restrictions such as performing puja and entering the male domain. She went to meet Gandhi with her relative who had come to Thanjavur during the period when the freedom struggle was intensifying and she joins congress. No one opposed Maniammal initially as joining the congress was a proud move for the upper class. After coming to the outside world, she learns about the middlemen who act as agents between the land lords and the farm workers who plunder the agricultural wages. She questions the need for a middle person or agent to manage the farm and its member. Thus the landlords and the agents hated her. The congress party throws her out as democracy has no role in common ownership because she sided with the workers by abolishing the middleman system. The redflag association is a symbol of the ray and the sickle, a symbol of respect and honor for the proletariat, symbol of the liberation of the society by the land lords and workers together. She fights with her full determination, declaring that she would take as many rebirths as necessary for this cause. But she is imprisoned. After coming out of prison, she shows interest in people's welfare. At this time, she is stabbed by a deer' s horn and dies mysteriously. This article will examine the bravery and courage of social activist Maniammal.

**Keywords:** Proprietary rights, Farmers, Landlord, Feudal lord, Agent

## முன்னுரை

பாதையில் பதிந்த அடிகள் என்ற நாவல் ஒரு இலக்கியப் படைப்பு மட்டுமல்லாது விளிம்புநிலை மக்களின் வலிகளையும் போராட்டங்களையும் பதிவு செய்யும் முக்கியமான ஆவண காப்பகமாகவும் உள்ளது. 1950 –களில் நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகள், பண்ணையடிமைமுறை, இடதுசாரி இயக்கத்தின் போராட்டங்கள் அனைத்தும் மிகத் தெளிவாக இந்நாவல் எடுத்தியம்புகிறது. உறவுகள் எல்லாம் எதிர்ப்புகளாக மாறிவிட்ட சமூக சூழலில் அரசியல் கட்சிகளின் ஆதிக்கங்களை எதிர்த்து தேசியவாதியாக, சமூகவாதியாக நின்று தாழ்த்தப்பட்ட பண்ணை அடிமைகளுக்கும், உழைப்பாளிகளுக்கும் நீதிவேண்டி போராடி; இறுதியில் ஒரு தியாகியாகி; தன் இன்னுயிரை நிலமகளுக்கு பரிசாக அளித்த மணியம்மாவின் சமூகத் தொண்டு குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## கிசான் சங்கம் அமைத்தல்

கிசான் சங்கம் என்பது விவசாயிகள் சங்கம் என்று பொருள்படும். விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது, அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவது, விவசாயம் தொடர்பான கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவது போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. சுருக்கமாகக் கூறினால் விவசாயிகளின் குரலாக ஒலிக்கும் பல அமைப்புகளைக் குறிக்கிறது.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்

உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்”

என்ற பாரதியாரின் கனவை நனவாக்கும் வண்ணம் விவசாய மக்களை ஒன்றிணைத்து கிசான் சங்கத்தை உருவாக்குகின்றாள். சேரி மக்களுக்கு கிசான் என்ற சொல்லிற்கான விளக்கத்தைத் தெளிவுபடுத்திக் கொடுக்கிறாள். சர்க்கார் வரியை வாங்கிவிட்டு போகிறவரை டிபுடி கலெக்டர் என்றும், சட்டம்படித்து கோர்டுல வாதாடுகிறவரை வக்கீல் என்றும் கூறுவதைப் போல கதிரறுத்துக்கட்டி, போரடிச்சு, நிலத்தை உழுது, அண்டைக்கட்டி, மடைபார்த்து, மடைதிறந்து, அடைத்து, நாற்றுநட்டு, களைபறித்து, மூட்டையாகக் கெட்டி அத்தனை வேலைகளையும் செய்பவர்கள் கிசான் மக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். “நிலத்தில் உழைச்சு சாகுபடி செய்யும் ஜனங்கள் தான் கிசான்” (பாகம் 2.ப.88). கூட்டத்திலிருந்து முருகன் அப்ப இந்த மிராசு ஆண்டையெல்லாம் ஆருங்க? என்று கேட்கிறான். அவங்க தான் உழைக்காமலே பிறர் உழைப்பை சுரண்டி தின்று வாழக்கூடியவர்கள், கொள்ளைக்காரர்கள் என்கிறாள்.

சாட்டையடி, சாணிப்பால், தொழுவைக்கட்டை, என எல்லா அநியாயங்களும் மாறவேண்டும். கள்ளுகுடி மாறி எல்லோரும் படித்து நான் சாம்பாரு, நீ வாயக்காரு என்ற வேறுபாடு ஒழிந்து ஒன்றாக வேண்டும் என்ற சமூக விழிப்புணர்வு சிந்தனையை சேரிமக்களுக்கு இச்சங்கத்தின் மூலம் ஊட்டுகிறாள்.

## சேரிக்குழந்தைகளுக்கு கல்வி

கல்வி, சமூகத்தில் நல்லொழுக்கத்தையும் பண்பாட்டையும் வளர்த்து சிறந்த சமூகம் உருவாக்க உதவி செய்கிறது. கல்வி, ஒருவரின் கண்ணோட்டத்தை மாற்றுவதோடு, வாழ்க்கையின் சவால்களுக்கு தீர்வுகாணவும், புதுமைகளைப் படைக்கவும் வழிவகுக்கிறது. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த வள்ளுவர்

“கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர்” என்கிறார்.

கல்வியே உண்மையான பார்வைக்கு ஆதாரம். கல்வி இல்லாத கண்கள், புண்கள் போல எந்தப் பயனும் இன்றி முகத்தில் இருப்பது வீண் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். கல்வி தனிநபரின் மன வளர்ச்சியை மேம்படுத்துவதோடு அறிவு, தன்னம்பிக்கை, சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றை வளர்த்து வாழ்வில் வெற்றிபெறவும் சமூகத்தில் சிறந்த குடிமகனாக வாழவும் வழிவகை செய்யும் என்பதை உணர்ந்து செயல்படுகிறாள் மணியம்மா. மதுவிலக்கும், ஹரிசன முன்னேற்றமும் காங்கிரஸின் உயிர் கொள்கைகள் என்பதை பூரணமாக உணர்ந்து சேரிக்குழந்தைகளுக்கு ‘வந்தே மாதரம்’ என்று உரக்கச் சொல்லிக் கொடுக்கிறாள்.

“கள்குடிக்கக்கூடாது. கள்குடித்தால் புத்தி கெட்டுப்போகும். உங்கப்பன் எல்லோரும் குடிக்கிறதால தான் நீங்க நல்லா சாப்பிட முடியல. துணிபோட முடியல. கள்ளு பாவம்” (பாகம் 1.ப.57) என்பதை கற்றுக்கொடுத்ததோடு மட்டுமல்லாது தென்னைமரத்தில் கட்டி வைத்திருக்கும் கள்ளு கலயத்தை குறிபார்த்து கல்லெறிந்து உடைக்கச்செய்கிறாள். மணியின் இச்செயல் பட்டாமணியத்தின் வைக்கோற்போரில் உதறிய ‘தீங்கங்கு’ என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். கல்வியறிவு இல்லாத மக்கள் குடியினால் குடியை கெடுக்கிறார்கள் என சேரிக்குழந்தைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறாள்.

## ஆண்டை – அடிமை

“‘ஆண்டகை’ என்ற சொல்லிலிருந்து ‘ஆண்டை’ என்ற சொல் உருவானது. இன்று ‘ஆண்டான்’ என்ற சொல்லோடு இது ஒத்திருக்கிறது. ஆண்டான் - அடிமை என்பது சமூக ஏற்றத்தாழ்வு, சுரண்டல் இவற்றை குறிக்கிறது. அதிகாரம், சொத்து, கட்டுப்பாடு கொண்டவர் ஆண்டான். ஆண்டான் சொல் கேட்டு நடப்பர், சுதந்திரம் அற்றவர்” அடிமை என்றும் விளக்கம் தரப்படுகிறது.

“ஆண்டாள் அடிமை மேலோர் கீழோர்

என்பது மாறாதோ”

இது கவிஞர் கண்ணதாசனின் புகழ்பெற்ற திரையிசைப் பாடல் வரிகள் ஆகும். இச்செய்யுள் வரிகள் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் மாறாதா என்ற கேள்வியை எழுப்பி சுதந்திரமான மக்கள் ஆட்சிகாலத்தை பற்றிப் பேசுகிறது. இந்த புரட்சியை மணியம்மாள் செய்ய முற்படுகிறாள்.

மணியம்மாள் பண்ணைவீட்டின் கொல்லை வழியாக உறவினர் வீட்டிற்கு செல்லும்போது கொல்லைப்பக்கத்தில் கூனிகுறுகிக் கொண்டு நிற்கும் அடிமை ஒருவனைப் பார்க்கிறாள். அம்மாவைப் பார்த்ததும் அவன் எட்டி நடக்க முயற்சிக்கின்றான். நில்லு நீ ஏன் எட்டி நடக்கிறாய். "நீயும் மனுசசாதி, நானும் மனுச சாதி, உன் ஆண்டையும் மனுச சாதி தான் எதுக்கு இங்கே நிற்கிற" (பாகம் 1, ப. 96). உடனே அவன் கண்களில் கண்ணீர் மல்க மகனுக்கு திருமணம் நிச்சயம் ஆயிருக்கு. மூன்று நாட்களாக ஆண்டையைப் பார்த்து விவரம் சொல்ல காரியக்காரரிடம் சொன்னேன். அவர் கவனிக்காமலே இருக்கிறார். மணி அவனை அழைத்துக்கொண்டு ஆண்டையின் வீட்டிற்குள் நுழைகிறாள். நெய்யில் வறுத்த பாதாம் பருப்பும், முந்திரிப்பருப்பும் தின்றவாறு ஊஞ்சலில், அடுத்து மனைவி கொண்டு வரும் காப்பிக்காக காத்திருக்கிறார் ஆண்டை.

கொல்லையிலே ஒருத்தன் நீ கொடுக்கப்போகிற முப்பது ரூபாய்க்காக மூன்று நாளாய் காத்திகிட்டு இருக்கிறான். இந்த பாதாம் பருப்பு, சுராஜ்மல்ஸ், வெள்ளிஃபில்டர் காபி எல்லாவற்றிற்கும் ஆதாரம் அவன் தான் (பாகம் 1, ப. 98). உங்கள் குலம், வம்சம் நல்ல நிலைமைக்கு உயரவேண்டுமானால் அந்த ஜனங்கள் வயிறெரியக்கூடாது. மணியம்மாள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவன், மனைவியிடம் முப்பது ரூபாய் எடுத்து வரச்சொல்கிறான். அப்போது எட்டநின்று கக்கத்துத் துணியை முன்னே போட்டு நிலத்தில் அங்கங்கள் அனைத்தும் பதிய விழுந்து வணங்குகிறான். இந்த திமிர், உதாசீனம் உங்களை அழிவுக்கு கொண்டு செல்லும் காலச்சக்கரங்கள் எனவும், நியாயம் உங்களை சுடும் எனவும் உரக்கக்கூறுகின்றாள். பிரிட்டிஷ்காரனைப் பார்த்து லஜபதிராய் உங்கள்; ஒவ்வொரு கொடுஞ்செயலும் பிரிட்டிஷ் ஆட்சியின் சவப்பெட்டியில் அடிக்கப்படும் ஆணி என்று சொன்னாராம் (பாகம் 1. ப. 99) அதுதான் இப்போது எனக்கும் ஞாபகத்திற்கு வருகிறது என்று கூறிவிட்டு மணி திரும்புகிறாள்.

## தோட்டி – துப்புரவுத் தொழிலாளர்களை ஒன்றிணைத்தல்

பெரும்பான்மையான மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் ஒருசில மரபுவழி இனத்தவர் அவர்கள் செய்யும் தொழில்களால் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர். பிறரது கழிப்பறை கழுவும் பணியை தியாக உணர்வுடன் செய்யும் மக்களை அநாகரிகமாக நடத்துபவர்களை எதிர்த்து போராடுகிறாள். நாகை ஊர்வலத்தில் தோட்டிவேலை செய்யும் மக்களை பார்த்ததிலிருந்து அவர்களின் வாழ்வியல் அவலங்களைப் புரிந்து கொள்கிறாள்.

தோட்டிவேலை செய்யும் மக்கள் ஒருநாள் வேலை செய்யாமல் இருந்தால் ஊரின்நிலை என்னவாகும். ஒருதாய் தன் குழந்தையின் அசுத்தங்களை, முகம் சிறிதும் சுளிக்காமல் நறுமணமாகக் கருதி அப்புறப்படுத்துகிறாள். அவள் அல்லவா அன்பின் அவதாரம், அஹிம்சையின் வடிவாகத் திகழ்பவள் என்று காந்திமகான் கூறியிருக்கிறார். சமுதாயத்தில் தாயாக உழைக்கும் மக்களுக்கு கிடைக்கும் மதிப்பு 'சீ எட்டிப்போ தோட்டி…(பாகம் 1, ப.133) கொல்லைவழி வந்து துப்புரவு செய்பவருக்கு கிடைக்கும் உணவு மிச்சம்மீதி, ஊசிப்புளித்த சோறும், குழம்பும்.

"ஈழை அசுத்தம் குப்பை இலை என்னவே எங்கள்

தலையிற சுமந்ததோம்

மொந்தையின் கூழைப் பலர் மொய்த்துக்குடித்து

பசித்து கிடந்தோம்"

என்ற பாரதிதாசனின் தொழிலாளர் விண்ணப்பம் பாடல் வரியோடு ஒப்புநோக்கத்தக்கதாக உள்ளது.

பரசரம ஜீவிகளாகிய பிறர் உழைப்பில் கொழுத்து வாழும் வர்க்கம் இவர்களை பூச்சியாக ஒடுக்குகிறது. துப்புரவு தொழிலாளர்களே ஒன்று சேருங்கள். சங்கம் அமையுங்கள். உரிமைக்காகப் போராடுவோம் என தோட்டி மக்களை ஒன்றிணைக்கின்றாள். சங்கம் அமைத்து போராடி வெற்றி பெறுகிறாள். இதன் விளைவாக பஞ்சப்படி, பிரசவ லீவு, கிராச்சுவிட்டி ஒப்புகொள்ளப்படுகிறது. (பாகம் 1. ப. 134)

## நடுவாள் முறையை ஒழித்தல்

உழைப்பாளிகளை சுரண்டக்கூடிய நடுவாள் (ஏஜெண்டு) முறையை ஒழிக்கிறாள். நில சொந்தகாரர்கள் பாடுபடும் ஜனங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அவர்களும் மனுச சாதி நாமும் மனுச சாதி. ஏஜெண்டாக இருக்கிறவன் சொந்தக்காரனுக்கும், உழைக்கிறவனுக்கும்

ஒன்றுபோல் நியாயம் வழங்க வேண்டும். இன்றைக்கு அப்படியா நடக்கிறது "இவனுக காட்டுதர்பார் நடத்துறானுங்க (பாகம் 1.ப.40). சின்னப்பண்ணைக்கு சரக்கு வாங்கிக்கொடுக்கிறதும், பெண்களை ஏற்பாடு பண்ணி கொடுப்பதும், ஏழைகளை கட்டி வைத்து அடிப்பதும் இப்படி பண்ணைக்கு அநியாயங்களை செய்வது நடுவாள்கள் தான். உழைப்பாளிகளையும் மிராசுகளையும் பிரிப்பவர்களும் இவர்கள் தான். நடுவாள் ஒழியவேண்டும் என அறைகூவல் விடுகிறாள்.

ஈனசாதிகளை உன்னால் மேய்க்க முடியாது என உள்ளூர்காரர் எழுப்பும் வினாவுக்கு சவால் விடுகிறாள். "சுழன்றும் ஏற்ப்பின்னது உலகம்" என உலகையே இயக்கும் முதன்மை தொழில் செய்யும் விவசாய கூலிகள் நசுக்கப்படுவதை எதிர்க்கிறாள். "நடுவாள் இல்லாமல் பண்ணையை நானே பார்க்கிறேன். நிலத்து சொந்தக்காரருக்கும் நிலத்திலிருந்து எப்படி எல்லா சுகமும் வரதன்னு தெரியணுமில்லையா" என்று முப்பாட்டன் காலத்திலிருந்தே காலம்காலமாக பின்பற்றபட்டு வந்த நடுவாள் அமைப்பை உடைத்தெறிகிறாள்.

## சிறைச்சாலையில் சமூகசேவை

மணியம்மாள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டடிருந்த காலத்தில் ஈரும் பேனும் பிடித்து, எலும்புகூடுகளாய் காணப்பட்ட குழந்தைகளுக்கு எண்ணெய்புரட்டி, பேனும் சிக்கும் எடுத்து, குளிப்பாட்டி, மருந்துபோட்டு, பாலும் சோறும், கஞ்சியும் ருசியாகக் கொடுத்து நல்ல ஆடைகளை உடுத்தி அழுகை ஒலியுடன் காணப்பட்ட குழந்தைகளிடம் சிரிப்பொலியைக் காண்கிறாள்.

ஜெயில்மந்திரி மாதவமேனன், குட்டியம்மாளு சிறையில் வருவதை கேள்விப்பட்டு ஷாஜாதியுடன் சேர்ந்து வழிமறிக்கிறாள். என்னம்மா இந்த குழந்தைகளைப் பார்த்தீர்களா, பெற்றோர் செய்த பாவத்திற்காக கள்ளம்கபடமற்ற இந்த குழந்தைகள் இப்படி தண்டனை அனுபவிக்க வேண்டுமா, 100 –க்கு 90 தாய்மார்களும் தண்டனை முடித்து வெளியே போகும்முன் இங்கேயே சாகின்றனர். எதிர்கால இந்தியாவுக்கு இதனால் வளம்காண முடியுமா? குழந்தைகள் எந்த பாவமும் செய்யவில்லை. இவர்களை நன்றாகப் பராமரிக்க வேண்டும் பால், பழம், முட்டை என சத்துள்ள உணவு குறைவில்லாமல் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கையை முன்வைக்கிறாள். மணி சிறைவாசம் முடிக்கும்முன் இக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு சிறைச்சாலையில் குழந்தைகளுக்கு சத்துள்ள உணவு வழங்கப்படுகிறது. இந்நிகழ்வு காப்பிய தலைவி மணிமேகலையின் புரட்சி சிந்தனையோடு ஒத்துப்போவதாக அமைகின்றது.

## முடிவுரை

விவசாயிகளின் போராட்டங்களை முன்னெடுத்த மணியம்மா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து தொழிலாளர்களுக்காக பல்வேறு சங்கங்களை அமைக்கின்றாள். சின்னசின்ன சேரிகளில் சென்று செங்கொடியை ஏற்றி வைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் காவல் தெய்வமாக திகழ்கின்றாள். நேர்மைக்கும் நீதிக்கும் கைவிலங்கு பூட்டப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட வேளையிலும் சேரி மக்களின் நலனை எண்ணி வருத்தமுறுகின்றாள். நான் செத்தாலும் அந்த சாம்பலிலிருந்து ஃபீனிஸ் பறவையைப்போல் மீண்டும் உருப்பெறுவேன் என நம்பிக்கை கொண்டெழுந்து செயல்படுகின்றாள். மானுடமே மேலான தெய்வம் என்பதையும், வாழ்க்கை என்பது எதிர்படும் கஷ்டங்களைத் தீவிரமாய் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவது என்பதையும் சமூகத்திற்கு உணர்த்துகின்றாள். காலம் முழுவதும் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வுகளின்றி மனிதநேய ஒருமைப்பாட்டுணர்வோடு வாழ வேண்டும் என்பதையெல்லம் எடுத்துரைத்த மணியம்மாவின் சமூக தொண்டினை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது. மேலும் மணியம்மாவின் அரசியல் போராட்டங்கள், வீரதீரச்செயல்கள் குறித்து ஆராயவும் இவ்வாய்வு வழிவகுக்கிறது.

### References

மெய்யப்பன் ச., பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை
தமிழ் வேட்பன்., திருக்குறள், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை
கீர்த்தி., பாரதிதாசன் கவிதைகள், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை
தமிழ் வேட்பன்., திருக்குறள், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், தேனாம்பேட்டை, சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License